
# செயலட்டை 19.1

## அட்சரகணிதக் கோவைகள் உருவாக்கலும் பிரதியிடுதலும்



என்னிடம் ரூபா 10 உள்ளது.



என்னிடம் ரூபா 15 உள்ளது.



எம்மிருவரிடமும் இருக்கும் மொத்தப் பணத்தொகையைக் காணுவது எப்படி என நீங்கள் எழுதுங்கள்.

...................................................................





இக்குருவிக் கூட்டிலுள்ள குருவிகள் 6 ஆகும்.

இக்குருவிக் கூட்டில் 2 குருவிகள் உண்டு.



இரு கூடுகளிலுமுள்ள குருவிகளின் எண்ணிக்கையைக் காணுவது எப்படி என நீங்கள் எழுதுங்கள்.

...................................................................



என்னிடம் 5 புத்தகங்கள் உண்டு.



எனது புத்தகங்கள் இருப்பது புத்தகப் பையில். நான் அப்புத்தகங்களின் எண்ணிக்கையை $x$ எனக்கொண்டால்



எம்மிருவரிடமுள்ள மொத்தப் புத்தகங்களின் எண்ணிக்கையைக் காணுவது எப்படி என நீங்கள் எழுதுங்கள்.

...................................................................



எனக்கு நண்பன் ஒருவர் 3 இனிப்புகள் தந்தார்.



என்னிடம் சில இனிப்புகள் உண்டு.



எம்மிருவரிடமுள்ள மொத்த இனிப்புக்களின் எண்ணிக்கையைக் காணுவது எப்படி என நீங்கள் எழுதுங்கள்.

...................................................................

# செயலட்டை 19.2






☞ $x$ இற்குப் பதிலாகத் தரப்பட்டுள்ள பெறுமதியை இட்டு கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | $x$ இன் பெறுமதி | $x + 2$ இன் பெறுமதி | $7 + x$ இன் பெறுமதி | $x - 3$ இன் பெறுமதி | $20 - x$ இன் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| உதா. : | 5 | 5+2 = 7 | 7+5 = 12 | 5-3 = 2 | 20 – 5 = 15 |
| | 6 | | | | |
| | 10 | | | | |
| | 12 | | | | |
| | 15 | | | | |

